அழைத்தேன். ஆனால், அவையில் நீங்கள் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அவர் பதில் சொன்னதற்குப் பிறகு கேள்வி எல்லாம் கேட்க முடியாது. (குறுக்கீடு) பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் கேள்வி கேட்க முடியாது, உட்காருங்கள். முன்பே, நீங்கள் அவையில் இருந்திருந்தால், நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி வழங்கியிருப்பேன். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்–தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–தொடர்ச்சி

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. சவுந்தரராசன், என்ன? சொல்லுங்கள்.

* **திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்–விடைகள் நேரத்தை நாங்கள் அனுமதித்தோம். கவன ஈர்ப்பிலும் நாங்கள் கலந்து கொண்டு பேசியிருக்கிறோம். இப்போது அரசினர் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பு **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சவுந்தரராசன், (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் வேண்டுமென்றே கேட்கிறீர்களேயொழிய, சரியான முறையிலே நீங்கள் கேட்கவில்லை. (குறுக்கீடு) நேரமில்லை, இன்றைக்குக் காலையிலே நீங்கள் வந்தது முதல், வினாக்கள்–விடைகள் நேரத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டீர்கள். பின்னர் Zero hour–லும் கேள்வியை raise செய்தீர்கள். (குறுக்கீடு) இப்போது கவன ஈர்ப்பு முடிந்து, நான் வேறு அலுவலுக்குப் போகப் போகிறேன். இப்போதும் நீங்கள் எழுந்து கேள்வி கேட்கிறீர்கள். (குறுக்கீடு) இது முறையில்லை; (குறுக்கீடு) இது முறையில்லை. அவை நடவடிக்கைகளுக்கு நீங்கள் குந்தகம் விளைவிக்கிறமாதிரி இருக்கிறது. ஆகவே, இது முறையில்லை, உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

5. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்குத் தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே இப்படிச் செய்கிறீர்கள், நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே செய்கிறீர்கள், நான் ஒன்றும் செய்ய முடியாது. (குறுக்கீடு) எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. திரு. க. பாலகிருஷ்ணன், ஆய்வில் இருப்பதையெல்லாம் எடுக்கச் சொல்லி, என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 2015–2016 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை'. என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.